# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109729

1. District : அரியலூர் PS: ஜ.தி.கு. பிரிவு Year: 2026 FIR No.: 04 Date: 20.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதஅ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(1)(c) r/w 13(2)

(ii) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் 1988 (திருத்தம் 2018) Sections பிரிவுகள்: 13(1)(a) r/w 13(2)

(iii) Act சட்டம்: இ.த.ச Sections பிரிவுகள்: 120(B), 167, 409, 419, 465, 468, 471 and 477(A)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.04.2017 Date to : 13.12.2018
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 16.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.07.2026 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : outcome of Prilminary Enquiry
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: ஊராட்சி ஒன்றிய அலுவலகம், செந்துறை 24 kmவடகிழ
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K.S. ரமேஷ்கீர்தா (b) Father's/ Husband's Name : M. திருநாரு விழுவேல்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1991 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : காவல் துணை (g) Address : ஜ.த.கு. பிரிவு
தொழில் கண்காணிப்பாளர் முகவரி அரியலூர் (மா)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. S. தர்தானம் S/o சுந்தரம், டி.வ.வ.அ (கிளை) 2. S. ஜாகீர் உசேன் (ஆய்வு) S/o ஷேக் அப்துல் டி.வ.வ.அ (கி.ஊ) 3. K. ராஜா (ஆய்வு) S/o காளியப்பன், டி.வ.வ.அ 4. P. ரவி S/o பிச்சைப்பிள்ளை, டி.திருகடம்பூர் வா.செ, 5. P. அறிவழகன் S/o பொய்காமி, ஜெயங்கொண்டம் வா.செ, 6. N. பழனிவேல் (ஆய்வு) S/o நடராஜன், டி.வ.வ.அ, 7. G. பக்கிரிசாமி S/o கணேசன், டி.வ.வ.அ - அனைவரும் செந்துறை ஊராட்சி ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

K.S.ஹேமசித்ரா, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர் பொறுப்பு அரியலூர் ஆகிய நான் இன்று 20.07.2026-ஆம் தேதி 16.00 மணியளவில் அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பணியில் இருந்த போது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக குறிப்பாணை எண், PE 85/2025/RDP/ARL dt:10.07.2026-ன் உத்தரவுப்படி பதிவு செய்த வழக்கின் விபரம் பின்வருமாறு

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் B. ஹேமிதா..... பதவி காவல் உதவி ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு அரியலூர்..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

—

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு —

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

20/7/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 20.07.2026 at. 16.50 hrs

Name: பெயர் K.S. ஹேமசித்ரா
Rank: நிலை கா.து.க.....No. எண் கா.து.க. பரிவு
அரியலூர் (பொ)

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2026 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:**

**எதிரிகள்:**

1. திரு.S.சந்தானம்,
த/பெ.சுந்தரம்,
முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
செந்துறை ஊராட்சி ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.
தற்போது உதவி இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
பெரம்பலூர் மாவட்டம்.

2. திரு. S. ஜாகீர் உசேன்(ஒய்வு)
த/பெ. சேக் அகமத்,
முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), செந்துறை ஊராட்சி ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.
தற்போது
31.03.2026 முற்பகல் பணி ஓய்வில் சென்றுவிட்டார்.

3. திரு.K. ராஜா(ஒய்வு),
த/பெ.காளியப்பன்,
முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், செந்துறை ஊராட்சி ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.
தற்போது
31.01.2023 முற்பகல் பணி ஓய்வில் சென்றுவிட்டார்.

4. திரு.P.ரவி, த/பெ.பிச்சைமுத்து,
முன்னாள் சிறுகடம்பூர் ஊராட்சி செயலர், செந்துறை ஊராட்சி ஒன்றியம், அரியலூர்.
தற்போது: குழுமூர் ஊராட்சி செயலர், அரியலூர் மாவட்டம்.

5. திரு.P.அறிவழகன், த/பெ.பெரியசாமி,
முன்னாள் குழுமூர் ஊராட்சி செயலர், அரியலூர்.
தற்போது: தளவாய் ஊராட்சி செயலர், அரியலூர் மாவட்டம்.

1-ம் எதிரியான திரு.சந்தானம் என்பவர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஆக 10.02.2016 முதல் 25.10.2017 வரை பணிபுரிந்த போது 01.05.2017 முதல் 24.05.2017 மற்றும் 01.06.2017 முதல் 08.06.2017 மற்றும் 24.07.2017 முதல் 25.10.2017 வரையிலான காலங்களில் செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) பொறுப்பு அலுவலராக பணிபுரிந்துள்ளார். தற்போது பெரம்லூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறார்.

2-ம் எதிரியான திரு.S.ஜாகிர்உசேன் என்பவர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், (கி.ஊ) 26.10.2017 முதல் 17.07.2018 வரை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்துள்ளார். கடந்த 31.03.2026 அன்று பணி ஓய்வில் சென்றுவிட்டார்.

3-ம் எதிரியான திரு.ராஜா என்பவர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 18.07.2018 முதல் 11.02.2019 வரை பணிபுரிந்துள்ளார். கடந்த 31.01.2023 அன்று பணி ஓய்வில் சென்றுவிட்டார்.

4-ம் எதிரியான திரு.P.ரவி என்பவர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், குழுமூர் ஊராட்சியில் ஊராட்சி செயலராக 01.07.2005 முதல் 30.06.2013 வரை மற்றும் 16.05.2017 முதல் 26.01.2024 வரை பணிபுரிந்துள்ளார். தற்போது குழுமூர் ஊராட்சியில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து வருகிறார்.

5-ம் எதிரியான திரு.P.அறிவழகன் என்பவர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், குழுமூர் ஊராட்சியில் ஊராட்சி

| | |
|---|---|
| 6. திரு.N. பழனிவேல், (ஓய்வு)<br>த/பெ.நடராஜன்,<br>முன்னாள் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>செந்துறை ஊராட்சி ஒன்றியம்,<br>அரியலூர் மாவட்டம்.<br>தற்போது<br>31.05.2025 அன்று பணி ஓய்வில் சென்றுவிட்டார். | செயலராக 01.07.2013 முதல் 16.05.2017 வரை பணிபுரிந்துள்ளார். தற்போது தளவாய் ஊராட்சி செயலராக பணிபுரிந்து வருகிறார்.<br><br>6-ம் எதிரியான திரு.N.பழனிவேல் என்பவர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக 24.08.2016 முதல் 26.02.2018 வரை பணிபுரிந்த போது செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் மண்டலம்-1ல் வரும் குழுமூர் ஊராட்சியில் ஊராட்சி சம்மந்தமான பணிகளையும் கவனித்து வந்துள்ளார். கடந்த 31.05.2025 அன்று பணி ஓய்வில் சென்றுவிட்டார். |
| 7. திரு.G.பஞ்சாபிகேசன்,<br>த/பெ.கணேசன்,<br>முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)<br>செந்துறை ஊராட்சி ஒன்றியம்,<br>அரியலூர் மாவட்டம்.<br>தற்போது:<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு திட்டம்),<br>திண்டுக்கல் மாவட்டம். | 7-ம் எதிரியான திரு. G.பஞ்சாபிகேசன் என்பவர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ஆக 23.12.2016 முதல் 01.05.2017 வரை மற்றும் 09.06.2017 முதல் 22.07.2017 வரையிலான காலங்களில் பணிபுரிந்த போது 02.05.2017 முதல் 31.05.2017 வரையிலான காலங்களில் மருத்துவ விடுப்பும், 01.06.2017 முதல் 08.06.2017 வரை ஈட்டிய விடுப்பும் எடுத்துள்ளார். கடந்த 23.07.2017 முதல் 25.10.2017 வரை சுமார் மூன்று மாதங்கள் மருத்துவ விடுப்பு மற்றும் ஈட்டிய விடுப்பில் சென்றுள்ளார். தற்போது திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு திட்டம்) ஆக பணிபுரிந்து வருகிறார். |

மேற்படி 1 முதல் 7 வரையிலான எதிரிகள் சம்பவம் நடைபெற்றுள்ள காலத்தில் ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018) பிரிவு 2 (c)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

கான்கிரீட் கூரையினாலான சொந்த வீடு இல்லாமல் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு கான்கிரீட் வீடு வழங்கும் திட்டம் கடந்த 2015-2016 ஆம் ஆண்டு முதல் அரசால் இந்திரா குடியிருப்பு திட்டம் (IAY) என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வந்தது.

அதனைத் தொடர்ந்து 2016-17 முதல் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) (PMAY-G) என்ற பெயரில் தற்போது வரை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2016-2017 ஆம் ஆண்டு முதல் PMAY(G) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்திற்கு Socio Economic and Caste Census-2011 (SECC data)-ல் உள்ள நபர்களை முன்னுரிமை அடிப்படையில் ஊராட்சி வாரியாக இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் தகுதியான நபர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் பெற்று, பட்டியலில் உள்ள நபர்கள் தற்போது PMAY(G) திட்ட பயனாளியாக தேர்வு செய்ய தகுதியுடைய நபரா என்பதனை உறுதிபடுத்துவதற்காக சம்பந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர் ஆகியோர்களுக்கு பயனாளிகளின் பெயர் பட்டியலை அனுப்பி வைப்பார். அதன்படி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர் ஆகிய இருவரும் சேர்ந்து தல ஆய்வு மேற்கொண்டு, பட்டியலில் உள்ள நபர் தற்போது PMAY(G) திட்டத்தின்கீழ் பயனாளியாக தேர்வு செய்ய தகுதியுடைய நபரா என்பதையும், வீடு கட்டுவதற்கான காலிமனை உள்ளதா என்பதனையும், தற்போது பயனாளர் வீடு கட்டுவதற்கு தயாராக உள்ளாரா என்பதையும் சரிபார்த்து, சரிபார்ப்பு படிவத்தில் பூர்த்தி செய்து, அதில் இருவரும் கையொப்பம் செய்து, பயனாளரின் ஆதார், குடும்ப அட்டை, MGNREGS அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல்களை பெற்று, சரிபார்ப்பு படிவத்துடன் இணைத்து வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். தகுதியற்ற நபராக இருந்தால் சரிபார்ப்பு படிவத்தில் PMAY(G) திட்ட பயனாளியாக தேர்வு செய்ய தகுதியற்ற நபர் என்பதனை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் தகுதியான பயனாளியா என்பதை உறுதி செய்த பின்னர் பயனாளிகளின் பட்டியலை தயார் செய்து தனது பரிந்துரையுடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு பட்டியல் தயார் செய்வதற்கு முன்பாக பயனாளிகள் அரசு வேலையில் உள்ளவரா, கான்கிரீட் வீடு வைத்துள்ளாரா, வேறு ஏதேனும் குடியிருப்பு திட்டங்களில் ஏற்கனவே பயன் அடைந்தவரா என்பதை இனங்கண்டு, அவ்வாறு உள்ளவர்களின் பெயர் விபரங்களை பட்டியலில் இருந்து நீக்கம் செய்து தகுதியான நபர்களை திட்டபயனாளியாக தேர்வு செய்ய வேண்டியது வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களது கடமையாகும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் பரிந்துரைக்கப்படும் பட்டியலில் உள்ள நபர்களை PMAY(G) திட்ட பயனாளியாக தேர்வு செய்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்படும். அதன்படி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் பயனாளர்களுக்கு வீடுகட்ட அனுமதி ஆணை (Work Order) வழங்கப்படும். பின்னர் பயனாளிகள் வீடுகட்ட தேர்வு செய்துள்ள இடத்தில் அளவீடு செய்து கொடுப்பதும், பயனாளிகள் வீடு கட்டும் பணியினை ஒவ்வொரு நிலையிலும் (Basement, Plinth, Roof, Completed) Geo-Tag புகைப்படம் எடுப்பதும், Bill Form Book தயார் செய்து அதனை உதவி பொறியாளரிடம் மேலாய்வு செய்ய வேண்டி ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது ஒன்றிய பணி மேற்பார்வையாளரின் கடமையாகும்.

பின்னர் உதவி பொறியாளர், அளவீடுகள் மற்றும் மதிப்பீடுகள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் மதிப்பீடு பட்டியலையும், Geo-Tag புகைப்படங்களையும் ஒப்பிட்டு சரிபார்த்து, தல ஆய்வு செய்து உறுதிசெய்த பின்னர் Online-ல் உள்ள தனது Login ID மூலமாக பயனாளிகளுக்கான தவணைத் தொகையினை விடுவிக்க அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்னர் பயனாளிகளுக்கான தவணைத்தொகை அவர்களது வங்கி கணக்குகளில் ECS மூலமாக வரவுவைக்கப்படும். இதில் முக்கிய அம்சம் என்னவென்றால், பயனாளி அல்லது பயனாளியின் குடும்பத்தாரை தவிர வேறு நபர்களின் வங்கி கணக்கில் பணம் வரவு வைக்கப்படக்கூடாது.

இத்திட்டத்தில் பயனாளி ஒருவருக்கு, ஒரு வீட்டிற்கு மொத்தம் ரூ.1,70,000/- (ரூ.1,20,000/-ரொக்கப் பணமும் மற்றும் ரூ.50,000/-மதிப்புடைய கட்டுமான பொருட்களும்) வழங்கப்படும். இதில் ரூ.1,20,000/-ம் மட்டும் 4 தவணைகளாக பயனாளியின் வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும். ரூ.50,000/- மதிப்புடைய கட்டுமான பொருட்களான சிமெண்ட் மூட்டைகள் மற்றும் இரும்பு கம்பிகள் போன்றவை வீடுகட்டும் பணி நடைபெற்றுவரும் போது பயனாளருக்கு வழங்கப்படவேண்டும். இவ்வாறான நடைமுறைகளை பின்பற்றி PMAY(G) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

SECC- Data-ன்படி முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டிருந்த பட்டியலின்படி பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வீடு பெறுவதற்கான தகுதியுடைய நபர்களின் பெயரில் அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுக்கா, குழுமூர் கிராமம் கீழத் தெருவைச் சேர்ந்த கலியமூர்த்தி மனைவி சின்னபொண்ணு, வயது-77 த/பெ.அழகன், பாலினம் பெண், என்பவரின் பெயரும் இருந்துள்ளது. சின்னப்பொண்ணு என்பவரின் கணவர் கலியமூர்த்தி என்பவர் சுமார் 15 ஆண்டுகளாக திருச்சி காந்தி மார்க்கெட்டில் லோடு மேனாக வேலை செய்து கொண்டு, திருச்சி காந்தி மார்க்கெட் அருகில் உள்ள வடக்கு தாராநல்லூரில் அவரது மனைவியுடன் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தவர், கடந்த 03.05.2007 ஆம் ஆண்டு உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். கலியமூர்த்தி இறப்பிற்கு பின்னர் திருமதி.சின்னபொண்ணு தனது சொந்த ஊரான குழுமூரில் வசித்துவந்துள்ளார். 4வது எதிரி திரு.ரவி, இவர் சுமார் 8 வருடங்களாக குழுமூர் ஊராட்சிமன்ற செயலராக பணிபுரிந்து வந்துள்ளார், இவர் மேற்படி கிராமத்தை பூர்வீகமாக கொண்டவர்.

SECC- Data-ன்படி திருமதி.சின்னப்பொண்ணு என்பவரின் பெயர் மேற்படி திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் பயனாளியாக தேர்வு செய்ய தயாராகவும், தகுதியுடைய நபராகவும் இருந்துள்ளதை அறிந்திருந்த 4வது எதிரியானவர், தனது ஊரைச்சேர்ந்த, தனது உறவினரான திரு.கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவருக்கு சாதகமாக செயல்பட்டு PMAY(G) திட்ட நிதியினை முறைகேடாக கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவருக்கு பெற்றுத்தந்து, அதன் மூலம் தானும் ஊதியம் அல்லாத பிற பயன் அடையவேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் செயல்பட்டு, அதனை நிறைவேற்றும் பொருட்டு 7வது எதிரி திரு.பஞ்சாபிகேசன், வட்டார வளர்ச்சி அலுவலராக (கி.ஊ), செந்துறை ஊராட்சி ஒன்றியம், 6-வது எதிரி திரு.பழனிவேல், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், செந்துறை ஊராட்சி ஒன்றியம், 5-வது எதிரி திரு.அறிவழகன், ஊராட்சி செயலர் குழுமூர் ஆகியோருடன்

கூட்டு சேர்ந்து தங்களது சதித்திட்டத்தினை நிறைவேற்றிடும் பொருட்டு PMAY(G) வீடு கட்டும் பயனாளிகளின் பட்டியலில் சின்னப்பொண்ணு க/பெ.கலியமூர்த்தி அல்லது சின்னப்பொண்ணு, த/பெ.அழகன் என்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டியதை, அவ்வாறு செய்யாமல் சின்னப்பொண்ணுவின் பெயருக்கு முன்னாள் இறந்து போன கலியமூர்த்தி என்பவரின் பெயரினை 7வது எதிரி திரு.பஞ்சாபிகேசன் என்பவர் உள்நோக்கத்துடன் சேர்த்து PMAY(G) TN1003785 நாள்: 18.04.2017-ன்படி பணி ஆணை வழங்கியுள்ளார்.

அதனை தொடர்ந்து 5வது எதிரி திரு.அறிவழகன் என்பவர் மேற்படி திட்ட பயனாளியான சின்னப்பொண்ணு என்பவரையும், அவரது இடத்தினையும் அடையாளம் காட்ட வேண்டியவர் அவ்வாறு செய்யாமல் மேற்படி எதிரிகள் 4, 6 மற்றும் 7 ஆகியோரின் குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்துள்ளார்.

6வது எதிரி- திரு.பழனிவேல் என்பவர் மேற்படி திட்ட பயனாளியான சின்னப்பொண்ணுவின் ஆவணங்களுக்கு பதிலாக 4-வது எதிரி ரவி என்பவர் ஆஜர் செய்த, IAY வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் பயனடைந்த, PMAY(G) திட்டத்தின் கீழ் பயனடைய தகுதியற்ற நபரான திரு.கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவரது ஆதார் அட்டை, குடும்ப அட்டை, சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு எண் மற்றும் பிற ஆவணங்களை முறைகேடாக ஆன்லைனில் பதிவேற்றம் செய்துள்ளார்.

மேற்படி பணி ஆணையின் அடிப்படையில் செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் பணிமேற்பார்வையாளராக பணிபுரிந்த திரு.திருமாவளவன் என்பவர் Stage –I, II, III and IV ஆகிய நிலையில் கலியமூர்த்தி, த/பெ.ராமசந்திரன் என்பவரையும் அவரது மனைவி தமிழ்செல்வி என்பவரையும், அவர்களால் IAY திட்டத்தின் கீழ் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த வீட்டின் முன்பாக நிற்கவைத்து புகைப்படம் எடுத்து, AWAAS Software-ல் பதிவேற்றம் செய்து FTO and Valuation Certificate தயார் செய்து 1வது, 2வது மற்றும் 3வது எதிரிகளிடம் சமர்ப்பித்துள்ளார்.

1-வது எதிரி திரு.சந்தானம் மேற்படி எதிரிகள் சமர்ப்பித்த போலியான ஆவணங்களை சரிபார்க்காமலும், களவிசாரணை மேற்கொள்ளாமலும், திரு.கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவரது வங்கி கணக்கிற்கு ECS மூலம் முதல் தவணை தொகையாக ரூ.26,029/-த்தை விடுவித்தும், ரூ.8,083/- மதிப்புடைய கட்டுமான பொருட்களை வழங்க ஆணையிட்டும், மொத்தம் 34,112 ரூபாய் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

2-வது எதிரி திரு.ஜாகீர்உசேன், முன்னாள் செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) என்பவர் திரு.கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவரது வங்கி கணக்கிற்கு ECS மூலம் இரண்டாவது தவணை தொகை ரூ.26,715/- விடுவித்தும், ரூ.7,373/- மதிப்புடைய கட்டுமான பொருட்களை வழங்க ஆணையிட்டும், மூன்றாவது தவணை தொகை ரூ.26,681/-யினை விடுவித்தும், ரூ.20,345/- மதிப்புடைய கட்டுமான பொருட்களை வழங்க ஆணையிட்டும் ஆகக்கூடுதல் ரூ.81,114/-ஐ வழங்கி அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

3-வது எதிரி திரு.ராஜா(ஓய்வு), முன்னாள் முன்னாள் செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) என்பவர் திரு.கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவரது வங்கி கணக்கிற்கு ECS மூலம் நான்காவது தவணை தொகை ரூ.40,575/-ஐ விடுவித்தும்,

ரூ.14,199/- மதிப்புடைய கட்டுமான பொருட்களை வழங்க ஆணையிட்டும், ஆகக்கூடுதல் ரூ.54,774/-ஐ வழங்கி அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறாக 1 முதல் 7 வரையிலான எதிரிகள் IAY வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் பயனடைந்த, PMAY(G) திட்டத்தின் கீழ் பயனடைய தகுதியற்ற நபரான திரு.கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவருக்கு சாதகமாக செயல்பட்டு PMAY(G) திட்ட நிதியினை முறைகேடாக வழங்கி, அதன் மூலம் தங்களும் ஊதியம் அல்லாத பிற பயன் அடையவேண்டும் என்ற கெட்ட உட்கருத்துடன் ஒன்றாக கூட்டு சேர்ந்து சதி செய்து அதனை நிறைவேற்றும் பொருட்டு போலியான ஆவணங்களை உருவாக்கியும், அவ்வாறு போலியாக உருவாக்கப்பட்ட ஆவணங்களை உண்மையான ஆவணங்களாக பயன்படுத்தியும், அரசு ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்றாமலும், முறைகேடாக ரூ.1,70,000/-த்தை (ரொக்கம் ரூ.1,20,000/- மற்றும் கட்டுமான பொருட்கள் ரூ.50,000/-) திரு.கலியமூர்த்தி, த/பெ.ராமச்சந்திரன் என்பவருக்கு வழங்கியுள்ளதன் மூலம் அரசுக்கு ரூ.1,70,000/-ம் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார். மேலும் மேற்படி தங்களது குற்றச்செயல்களை மறைக்கும் பொருட்டு சில ஆவணங்களை மறைத்தும் உள்ளார்கள்.

எனவே எதிரிகள் 1, 2, 4, 5, 6 மற்றும் 7 ஆகியோர் மீது 1988-ம் ஆண்டின் ஊழல் தடுப்புச்சட்டம் பிரிவு- 13 (1) (c) r/w 13(2) மற்றும் இந்திய தண்டனை சட்டம், பிரிவு 120(B), 167, 409, 419, 465, 468, 471, 477(A) மற்றும் எதிரி 3 என்பவர் மீது 1988-ம் ஆண்டின் ஊழல் தடுப்புச்சட்டம் (திருத்த சட்டம் 2018), பிரிவு 13 (1) (a) r/w 13(2) மற்றும் இந்திய தண்டனை சட்டம், பிரிவு 120(B), 167, 409, 419, 465, 468, 471, 477(A)-ன்படியும், இன்று 20.07.2026 தேதி 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் கனம் முதன்மை மற்றும் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

20/7/2026

காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
பெரம்பலூர், (பொ)அரியலூர்.